பக்கங்கள்:-18

காலை முரசு

## இந்தியத் தூதுவர் ஹக்கீமுடன் பேச்சு

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று வெள்ளிக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துப் பேசினார்.

இலங்கையின் அரசியல் முன்னேற்றங்கள் மற்றும் இந்திய – இலங்கை 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 12 | சனிக்கிழமை | 28.09.2024 | அதிர்வு 057



### பொதுத் தேர்தலில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றி

# சஜித் அணியின் ஆட்சியை கொண்டுவந்தே தீருவோம்!

## முன்னாள் எம்.பி. மனோ சூளுரை

"ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவால் வெற்றி பெற முடியாமல் போய்விட்டது. எனினும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றுவோம். ஐக்கிய மக்கள் கூட்டணியின் அரசாட்சியை நிறுவியே தீருவோம்."

-இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார். 06

### ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவளித்த

## மொட்டு உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தார் நாமல்



நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களையும், உள்ளூராட்சி சபை உறுப்பினர்களையும் மீண்டும் கட்சியில் இணையுமாறு பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ 06



பொதுக்கட்டமைப்புக்காரர்கள் சங்கு, சக்கரம், எதில் போட்டியிடுவது என்றெல்லாம் பிகு பண்ணிக் பண்ணிக் கொண்டிருக்க, சங்கைத் தனது சின்னமாக மாற்றுவதற்கு குத்துவிளக்கு கூட்டணி நடவடிக்கை எடுத்துவிட்டது என்று தெரிகிறது.

இலங்கைத் தேர்தல் சட்டங்களின்படி ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்டு 7 நாள்களுக்குள் ஒரு கட்சி தனது சின்னத்தை மாற்ற விண்ணப்பித்தால் அதற்கு தேர்தல் ஆணையம் இடமளிக்கும்.

சங்குச் சின்னத்தில் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதா என்று பொதுக் கட்டமைப்பின் அங்கத்தவர்களான பொது அமைப்பின் பிரதிநிதிகள் தங்களுக்குள் குழம்பியடித்து இடறுப்பட்டுக் கொண்டிருக்க, 06



# லெபனானில் இலங்கையர் பாதுகாப்பாக உள்ளார்கள்

லெபனானில் வசிக்கும் இலங்கையர்கள் பாதுகாப்பாக இருக்கின்றனர் என அந்நாட்டுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அங்கு வசிக்கும் இலங்கையர்களுடன் தூதரம் நெருங்கிய தொடர்பிலுள்ளதாகவும் தூதுவர் கபில ஜயவீர குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 7,600 இலங்கைப் பணியாளர்கள் லெபனானில் பணி புரிந்து வருகின்றனர் எனவும், அவர்களில் பெரும்பாலானோர் நாட்டின் தெற்குப் பகுதிகளில் வசிக்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஹிஸ்புல்லா அமைப்பை இலக்கு வைத்து, லெபனானின் வட பகுதிகளில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்தியிருந்தது.

மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் இலங்கையர்கள் வசிக்கவில்லை எனவும் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 600 இற்கும் மேற்பட்டோர் உயிரழந்தனர்.

இந்த தாக்குதல்களுக்கு லெபானும் பதிலடி வழங்க ஆரம்பித்துள்ளதால், அப்பகுதியில் மோதல் நிலைமை உருவாகியுள்ளது.


# இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக டி.எஸ்.ராஜகருணா நியமனம்

இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலியக் களஞ்சிய முனையத்தின் புதிய தலைவராக டி.எஸ்.ராஜகருணா நியமிக்கப்பட்டுள்ளார்.

டி.எஸ்.ராஜகருணா இதற்கு முன்னர் முத்துராஜவெல எரிபொருள் முனையத்தின் முகாமையாளராகச் செயற்பட்டார்.

இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக பேராசிரியர் மயூர நெத்திகுமாரகே நியமிக்கப்பட்டுள்ளார்.





# மின்கட்டணக் குறைப்புக்கான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன

மின்கட்டணத்தை குறைப்பது தொடர்பான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் மேற்படி ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

எனினும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளதால், புதிய நாடாளுமன்ற அமர்வின் பின்னரே ஆணைக்குழுவிற்கான புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மின்சாரக் கட்டணம் தொடர்பில் 06 மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும், அது முறையாக மேற்கொள்ளப்படவில்லை என ஆணைக்குழுவின் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் மக்களுக்கு அதிகபட்ச நிவாரணம் கிடைக்கும் வகையில் மின்சாரக் கட்டணத்தை குறைப்பதே புதிய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனவும் இலங்கை மின்சார சபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.



# முன்னாள் அமைச்சர்களின் வாகனங்கள் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும்

கடந்த அரசாங்கத்தின்போது அமைச்சர்கள் உட்பட அரச அதிகாரிகள் பயன்படுத்திய வாகனங்கள், விசாரணைகளின் பின்னர் மீண்டும் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்கு அமைய 59 அரச நிறுவனங்களுக்கு மேற்படி வாகனங்கள் வழங்கப்படவுள்ளன என அந்த அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தின்போது, அமைச்சர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பயன்படுத்திய பல வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகிலும் இலங்கை மன்றக்கல்லூரிக்கு அருகிலும், காலி முகத்திடல் பகுதியில் உள்ள வாகன தரிப்பிடம் ஒன்றிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

வி 8 ரக சொகுசு வாகனம், ஜிப் ரக வாகனம், ரேஞ் றோவர், மொண்டிரோ உள்ளிட்ட சொகுசு ரக வாகனங்கள் இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

# சிறப்பாகச் செயற்பட்ட தமிழ் எம்.பி. சிறிதரன்!

நாடாளுமன்ற அமர்வுகளில் சிறப்பாகச் செயற்பட்ட எம்.பிக்களின் தரவரிசையை ஆயவொசல.டம வெளியிட்டிருக்கிறது.

இந்தத் தரவரிசையில் 225 எம்பிக்களில் முதல் 15 இடத்திற்குள் ஒரே ஒரு தமிழ் எம்.பியாக சிறீதரன் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

2020 தொடக்கம் 2024 வரையான கடந்த நாடாளுமன்றில், 52 தமிழ்ப் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ், முஸ்லீம் மக்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் சிறப்பாக செயல்பட்டவர்களில், முதலாவது தமிழ் எம்பியாக சிறீதரன் தெரிவுசெய்ப்பட்டிருக்கிறார்.



கீழே உள்ள இணைப்பில் அனைவரது தரைவரிசை நிலைகளையும் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.
https://manthri.lk/en/ranks

# சேருவிலவில் பாடசாலைக்குள் நேற்றுப் புகுந்த காட்டு யானை!

திருகோணமலை – சேருநுவர கல்விப் பிரிவுக்குட்பட்ட சேருவில கவுந்திஸ்ஸ ஆரம்பப் பாடசாலைக்குள் யானையொன்று நேற்று நண்பகல் புகுந்துள்ளது. அதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

மதியம் பதினொன்று நாற்பத்தைந்துக்கு பாடசாலையின் வகுப்பறைகள் அமைந்த பகுதிக்குள் புகுந்தமையினால் சற்றுநேரத்துக்கு மாணவர்கள் பெரும் பதற்றத்தில் காணப்பட்டுள்ளனர்.

யானை வெளியேறும் வரை பாடசாலை மாணவர்களை ஒரே வகுப்பறையில் வைத்திருந்தமையுடன், ஆசிரியர்களும் விரைந்து செயல்பட்டு மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தனர்.

சேரு ஏரியில் தண்ணீர் குடிக்க வந்த யானைகளில் இந்த ஒற்றை யானை திடீரென பிரதான நுழைவாயில் வழியாக பாடசாலைக்குள் நுழைந்ததால் மாணவர்கள் அலறியடித்தனர். மாணவர்களை வகுப்பறைகளில் தங்க வைத்து பத்திரப்படுத்தினர் எனப் பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.



யானை பிரதான வாயிலுக்குள் நுழைந்து பாடசாலையின் பின்புறமுள்ள வேலியினூடாக காட்டுக்குள் சென்றதாகவும் அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பாடசாலைக்கு தற்காலிக மின்வேலி அமைக்கப்பட்டுள்ள போதிலும், அது பராமரிப்பின்றி பாழடைந்த நிலையில் காணப்படுவதாகவும் இதன்காரணமாக பாடசாலைக்கு தொடர்ந்து யானைகளின் அச்சுறுத்தல் உள்ளதாகவும், இதனால் மாணவர்களுக்கு மேலதிகமாக கற்பிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் அதிபர் இதன்போது தெரிவித்தார்.



# முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய வீடுகளை ஒப்படைக்குமாறு அறிவிப்பு

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பயன்படுத்திய அனைத்து அரச குடியிருப்புகள் மற்றும் விடுதிகளை உடனடியாக மீள ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு பொது நிர்வாக அமைச்சு எழுத்து மூலம் இதனை அறிவித்துள்ளது.

சுமார் 15 முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் ஏற்கனவே அரச குடியிருப்புகள் மற்றும் விடுதிகளை ஒப்படைப்பது குறித்து விசாரணை நடத்தியதாக அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

முன்னாள் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பல நிறுவனங்களுக்குக் கொழும்பில் உள்ள சுமார் 50 அரச விடுதிகள் வழங்கப்பட்டிருந்தன.

இதேவேளை, பொதுத் தேர்தல் நடைபெறும் திகதி வரை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாதிவெலையிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்புகளை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குடியிருப்புக்களை பொதுத் தேர்தல் நடைபெறும் தினத்திலோ அல்லது அதற்கு மறுநாளோ ஒப்படைக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த முத்திரை கட்டணம் உள்ளிட்ட அனைத்து வகையான கொடுப்பனவுகளும், வசதிகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

# அநுர அரசின் வேலைத்திட்டத்துக்கு கொரிய முகவர் நிறுவனம் பேராதரவு

தற்போதைய அரசின் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய வேலைத்திட்டத்துக்கு முழு ஒத்துழைப்பு வழங்க கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடியபோதே இதனைத் தெரிவித்தனர்.

இலங்கை அரசு முன்னெடுக்கும் ஊழல், மோசடி ஒழிப்பு வேலைத் திட்டத்துக்கு நிதி உதவி வழங்கவும், இலங்கையின் தேவை அடிப்படையில் கடன்களை வழங்கவும் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் இதன் போது இணக்கம் தெரிவித்தது.

இலங்கைக்கான கொரிய தூதுவர் மியோன் லீ, பிரதி தூதுவர் சோன்கய் ஜியோங், கொரிய சர்வதேச ஒத்துழைப்பு



முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர் யுன்க்ஜின் கிம், பிரதிப் பணிப்பாளர்களான யோன்க்வன் கிம், யுன்சூ ஜியோன், டி.ஐ.எம்.ஓ. வின் நிறைவேற்று அதிகாரி ரொஷான் சமரசிங்க மற்றும் இலங்கை ரயில் திணைக்களத்தின் பிரதி நிறைவேற்று அதிகாரி பீ.எம். யூ.எஸ்.பன்னஹெக்க உள்ளிட்டோரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# மலசலகூடக் கழிவு நீர்த் தொட்டியில் இருந்து ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் சடலமாக மீட்பு

## படுகொலை எனப் பொலிஸார் சந்தேகம்

ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் , பிஹிம்பியகொல்லேவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மலசலகூடக் கழிவு நீர்த் தொட்டியில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் , பிஹிம்பியகொல்லேவ பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் தனது வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீட்டின் மலசலகூடக் கழிவு நீர்த் தொட்டியில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக அயல் வீட்டார் சடலமாக மீட்கப்பட்டவரின் மகனிடம் தெரிவித்துள்ளனர்.

பின்னர், சடலமாக மீட்கப்பட்டவரின் தாயும் மகனும் வீட்டின் மலசலகூடக் கழிவு நீர்த் தொட்டியைச் சோதித்துப் பார்த்தபோது சடலத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து, சடலமாக மீட்கப்பட்ட ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாயின் தாயும் மகனும் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் எவரேனும் நபரால் படுகொலை செய்யப்பட்டு மலசலகூடக் கழிவு நீர்த் தொட்டியில் வீசப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மகாவலி ஆற்றில் மூழ்கிக் காணாமல்போன இரண்டு இளைஞர்களின் சடலங்களும் மீட்பு!



பொல்கொல்லை நீர்த்தேக்கத்துக்குக் கீழ் மகாவலி ஆற்றில் நீராடச் சென்ற வேளையில் காணாமல்போன இரண்டு இளைஞர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை மகாவலி ஆற்றில் நீராடச் சென்ற ஐந்து இளைஞர்களில் இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போயிருந்தனர்.

அதனையடுத்து, மேற்படி இருவரையும் தேடும் பணியில் வத்துகாமம் பொலிஸார் மற்றும் கடற்படை அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், காணாமல்போன இருவரில் ஒருவரது சடலம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர், நேற்று வெள்ளிக்கிழமை காலை மற்றைய இளைஞரின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இரண்டு இளைஞர்களும் 19 மற்றும் 20 வயதுடைய வத்துகாமம் – குன்னேபான பிரதேசத்தில் வசிப்பவர்கள் ஆவர்.

உயிரிழந்தவர்களது சடலங்கள் நேற்று வெள்ளிக்கிழமை மாலை கண்டி தேசிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.








# வடக்கின் புதிய ஆளுநர் வேதநாயகனுக்கு இந்தியத் துணைத் தூதர் நேரில் வாழ்த்து!

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் புதிதாகக் கடமைகளைப் பொறுப்பேற்ற ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனைச் சந்தித்த யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, வடக்கு மாகாணத்தின் ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது, இந்தியாவுக்கும் இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

குத்து விளக்குக் கூட்டணி தனது சின்னத்தை சங்காக மாற்றுவதற்கான விண்ணப்பத்தை தேர்தல் ஆணையத்திடம் கையளித்து விட்டதாகத் தெரிகிறது

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் குத்து விளக்கு கூட்டணியும் உட்பட்ட பொதுக் கட்டமைப்பினர் சங்குச் சின்னத்தில் ஒரு வேட்பாளரை நிறுத்தி, அந்தச் சின்னத்தைப் 'பொப்பிலராக்க', அந்தப் பொதுக் கட்டமைப்பின் இணக்கமின்றியே அந்த சங்குச் சின்னத்தை, குத்துவிளக்குக் கூட்டணி சுவீகரிக்க போகின்றது. இனி அது குத்துவிளக்குக் கூட்டணியே அல்ல. சங்குக் கூட்டணி தான்.

\+ + +

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கிய மத்திய குழுக் கூட்டம் இன்று வவுனியாவில்..

விடயங்கள், கலவரங்கள், மீளக் களேவரங்கள் ஏற்பட்டாலும் கூட ஆச்சரியப் படுவதற்கு இல்லை என்று பிராந்திய செய்தியாளர்கள் தெரிவித்தார்.

\+ + +

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் Bar பொமிட் எடுத்தார் எனச் செய்திகளை சமூக வலைத்தளங்களில் பரப்பிய 7 பேர் மீது அந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலும், ஒட்டிசுட்டான் Cyber Crime பிரிவிலும், கொழும்பில் இருக்கும் Cyber Crime இன் தலைமையிடத்திலும் முறைப்பாடு செய்திருக்கிறார்.

நேற்றைய தினம் 7 பேரில் ஒருவரை பொலிஸ் அழைத்து விசாரித்ததில் அந்த நபர் தான் பதிவிட்ட கருத்துக்கு ஆதாரம் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டு, தன்னை மன்னித்து விடும்படி கேட்டிருக்கிறார். ஆனால் அந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரோ இது விடயத்தில் முழுமையான சட்ட நடவடிக்கை எடுத்த பின்னரே விடயத்தை முடிவுறுத்தலாம் என்பதில் உறுதியாக இருக்கிறார் எனத் தெரிகிறது.

## பஸ் மோதி வயோதிபப் பெண் சாவு!

பஸ் மோதி வயோதிபப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு – கண்டி வீதியில் உள்ள அம்பேபுஸ்ஸ பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என்று வரக்காப்பொல பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று வீதியில் பயணித்த வயோதிபப் பெண் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது படுகாயமடைந்த வயோதிபப் பெண் வரக்காப்பொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.



அம்பேபுஸ்ஸ, வரக்காப்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய வயோதிபப் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து பஸ் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வரக்காப்பொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சஜித் அணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் கூறுகையில்,

"ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளக மாற்றங்களைச் செய்துகொண்டதன் பின்னர் நாடாளுமன்றத் தேத்தல் தொடர்பில் கூட்டணியாகக் கலந்துரையாடுவோம்.

நாங்கள் தனிக் கட்சி. தமிழ் முற்போக்குக் கூட்டணி என்ற அடிப்படையில் இம்முறை மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா, தென் மாகாணங்களில் எங்களின் ஆதரவாளர்கள் வாக்குகளை பெற்றுக் கொடுத்திருக்கின்றார்கள். எங்கள் மக்கள் எங்களின் நிலைப்பாட்டை ஏற்று நடந்திருக்கின்றார்கள். அது ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் தெரியும்.

எங்கிருந்தாலும் நாங்கள் நிலைத் திருப்போம். இன்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றோம். தொடர்ந்தும் அங்கம் வகிக்கும் விருப்பத்துடனேயே இருக்கின்றோம். அதற்கான அடிப்படையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்." – என்றார்.

## இந்தியத் தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

## மொட்டு உறுப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, பொதுத் தேர்தலை முன்னிட்டு கட்சியை மறுசீரமைப்பதாகவும், திறமையான இளைஞர்களுக்கு அதிகளவில் வாய்ப்பு வழங்க இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# எதிர்வரும் நாள்களில் மழைவீழ்ச்சி கூடும்!

நாட்டின் சில பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதேநேரம், எதிர்வரும் நாள்களில் நாட்டில் மழை வீழ்ச்சி அதிகரிக்கக் கூடிய சாத்தியம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும்.

அத்துடன், வடக்கு, வடமத்திய, ஊவா, மற்றும் தென் மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அதேநேரம், மின்னல் தாக்கங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்வதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# பாரிய கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிடுவோம்

## ஐ.தே.கவின் சமன் ரத்னப்பிரிய தெரிவிப்பு




“வரலாற்றிலேயே மிகப்பெரிய கூட்டணி அமைத்து நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட எதிர்பார்க்கிறோம். ஐக்கிய மக்கள் சக்தியுடனான கலந்துரையாடலும் சாதகமான நிலைக்கு வந்துள்ளது.”

– இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசிய கட்சி எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

“நாடாளுமன்ற தேர்தலுக்கு தற்போது அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் எதிர்க்கட்சியில் இருக்கும் அனைத்து கட்சிகளையும் இணைத்துக்கொண்டு தேர்தலுக்கு முகம்கொடுப்பதற்கே எதிர்பார்க்கிறோம்.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் அவ்வாறு இருப்பதாகவே எமக்குத் தோன்றுகிறது. அவ்வாறான பரந்துபட்ட கூட்டணியை அமைக்குமாறே அனைவரும் வற்புறுத்தி வருகின்றனர்.

அதனால், இந்த கூட்டணியை அமைப்பதற்காக தற்போது ஐக்கிய மக்கள் சக்தியுடனான கலந்துரையாடலை ஆரம்பித்திருக்கிறோம்.

அதேபோன்று மொட்டுக் கட்சியின் பெரும்பான்மை பிரிவினர், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களுடனும் கலந்துரையாடல் இடம்பெற்று வருகிறது.

ஓரிரு தினங்களில் இந்த கலந்துரையாடல்களை முடிவுக்கு கொண்டுவர முடியுமாகும். அதனால் வரலாற்றில் பெரிய கூட்டணி அமைத்து இந்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட முடியுமாகும் என எதிர்பார்க்கிறோம்.

பல்வேறு தரப்பினர்கள் கட்சிகளுடன் கலந்துரையாடிய விடயங்களை ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் நாங்கள் கலந்துரையாடினோம்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இரண்டு தினங்களுக்கு முன்னர் கலந்துரையாடினோம். நேற்றும் கலந்துரையாடினோம்.

அந்த கலந்துரையாடல் சாதகமாக அமைந்துள்ளது. ஆரம்பத்தில் ஐக்கிய மக்கள் சக்தி இந்த பேச்சுவார்த்தைக்கு பின்வாங்கியபோதும் தற்போது அவர்கள் கலந்துரையாடல்களுக்கு இணக்கம் தெரிவித்து, ஆரோக்கியமான பல கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள்.

அதனால் தொடர்ந்தும் அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி எப்படியாவது நாடாளுமன்ற தேர்தலில் கூட்டணியாக போட்டியிடவே நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

கூட்டணி அமைத்து போட்டியிடுவதன் மூலமே எமக்கு தேர்தலில் எதிர்பார்ப்பொன்றை ஏற்படுத்திக்கொள்ள முடியும். எமது ஆதரவாளர்களின் எதிர்பார்ப்பும் அதுவாகும்.”– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நீதித்துறை அவமதிப்பு

உயர்நீதிமன்றத்தின் உத்தரவைப் பின்பற்றத் தவறியமை மூலம் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் நாயகம் ஹர்ஷா இலுப்பிட்டியவை அடுத்த ஜனவரி வரை விளக்கமறியலில் வைப்பதற்கு உத்தரவிட்டிருக்கின்றது உயர்நீதிமன்றம்.

இணையவழியில் விசா வழங்கும் முறைமையை ரத்துச் செய்து அமைச்சரவை எடுத்த தீர்மானத்தை உயர் நீதிமன்றம் இடைநிறுத்தி உத்தரவிட்ட போதிலும, நிறுத்தப்பட்ட இணைய வழி விசா வழங்கல் முறைமையை மீள ஆரம்பிக்காமல் இழுத்தடித்தமை மூலம் நீதிமன்றத்தை குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் நாயகம் அவமதித்தார் என்று கூறப்படுகிறது.

உயர்நீதிமன்ற உத்தரவை தம்மால் நடைமுறைப்படுத்த இயலாமல் இருந்தால் அது குறித்து குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் நாயகம் உடனடியாக அந்த விவரங்களை உயர் நீதிமன்றத்திற்கு தெரிவித்து, மன்றின் அடுத்த கட்ட வழிகாட்டலை அவர் கோரியிருக்க வேண்டும்.

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தாமலும், அது குறித்து நீதிமன்றுக்கு அறிவிக்காமலும் செயற்பட்டமை மூலம் நீதிமன்றம் குறித்தோ அதன் உத்தரவு குறித்து தமக்கு சிரத்தை ஏதும் இல்லை என்று காட்டும் விதத்தில் அவர் நடந்து கொண்டிருக்கின்றார் என்பது கண்கூடு.

முன்னைய ரணிலின் அரசின் காலத்தில் உயர் அதிகாரிகள் பலரும் இப்படி நீதிமன்றங்களைத் தூக்கி எறியும் விதத்தில் நடந்து கொண்டனர் என்பது உண்மையே.

நீதிமன்ற செயற்பாடுகளை அப்போது ஜனாதிபதியே பொது வெளியில் மிகக் காட்டமாக விமர்சித்து வந்தார் என்பதும் நன்கு அறியப்பட்ட உண்மை.

அதேபோல அவரது அரசின் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட நீதிமன்ற செயற்பாடுகளை நாடாளுமன்றத்தினுள் கடுமையாக - காட்டமாக - விமர்சித்து வந்தனர்.

நிறைவேற்றதிகாரமும் நாடாளுமன்ற சிறப்புரிமைகளும் வழங்கிய பாதுகாப்பை வைத்துக் கொண்டு நீதித்துறையை மலினப்படுத்தும் விதத்தில் அவர்கள் அப்படி நடந்து கொண்டமையைப் பார்த்து அந்த வழியில் செயல்படுவதற்கு அல்லது நீதித்துறை குறித்து அசசிரத்தையாக நடந்து கொள்வதற்கு அரச உயர் அதிகாரிகளும் தூண்டப்பட்டு இருக்கின்றார்கள் என்பதையே குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் நாயகத்தின் நடத்தை எடுத்துரைத்து நிற்கின்றது.

அதே சமயத்தில் சட்ட முறைமைகள் ஒழுங்கு விதிகளுக்கு மாறாக அரசியல் தலைமைகள் வழங்கும் உத்தரவுகளுக்கு இணங்கி செயல்படுவதன் விளைவு தம்மை எந்த எல்லை வரைக் கொண்டு செல்லக்கூடியது என்பதை அரச உயர் அதிகாரிகளுக்கு எடுத்துரைப்பதாகவும் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் நாயகத்துக்கு எதிரான உயர் நீதிமன்றத்தின் உத்தரவு அமைந்துள்ளது.

தரம் குறைந்த மருந்துக் கொள்வனவு தொடர்பாக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலகைதாகி, நீண்டகாலம்விளக்கமறியலில் இருந்த பின்னர், இப்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அந்த விடயத்தை ஒட்டியும்பலஅரசுஅதிகாரிகளும்கைதாகி விளக்க மறியலில் நீண்ட காலம் வாட வேண்டியதாயிற்று.

இவையெல்லாம் அரசியல் தலைவர்களின் முறையற்ற செயற்போக்குத் துணை போன அரசு அதிகாரிகளின் நிலைமை பற்றிய உதாரணங்கள் தாம்.

# முதல்வர் ஸ்டாலின் உடன் செந்தில் பாலாஜி சந்திப்பு

## காலில் விழுந்து ஆசி பெற்றார்



டில்லியில் இருந்து தமிழகம் திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலினை, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

சென்னை விமான நிலையத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், டில்லியிலிருந்து திரும்பிய முதல்வர் ஸ்டாலினை முதல் நபராக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி வரவேற்றார். தொடர்ந்து முதல்வருக்கு பொன்னாடை அணிவித்து, பின்னர் அவரது காலில் விழுந்து ஆசி பெற்றார்.

இந்தச் சந்திப்பின்போது அமைச்சர்கள் பொன்முடி, சேகர் பாபு, மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் முக்கிய நிர்வாகிகள் உடனிருந்தனர். இதைத் தொடர்ந்து விமான நிலையத்தில் உள்ள ஓய்வறையில், மு.க.ஸ்டாலினுடன் செந்தில் பாலாஜி மற்றும் பொன்முடி உள்ளிட்ட மூத்த அமைச்சர்கள் அமர்ந்து சிறிது நேரம் பேசினர். தொடர்ந்து விமான நிலையத்தில் இருந்து முதல்வர் புறப்பட்டுச் சென்றார்.

முன்னதாக, சட்டவிரோத பண பரிவர்த்தனை வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் பிணை வழங்கியது. இதைத் தொடர்ந்து, 471 நாள்களாக புழல் சிறையில் இருந்த அவர் நேற்று முன்தினம் இரவு விடுவிக்கப்பட்டார். வாரத்தில் 2 நாள்கள் அமலாக்கத் துறை அலுவலகத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும், கடவுச்சீட்டை ஒப்படைக்க வேண்டும் என்பது உட்பட 6 நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அவர் மீண்டும் அமைச்சர் ஆவதில் சட்டப்பூர்வமாக எந்தச் சிக்கலும் இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதள பதிவில்,

“சகோதரர் வி.செந்தில் பாலாஜிக்கு 471 நாள்களுக்கு பிறகு உச்ச நீதிமன்றத்தால் பிணை கிடைத்துள்ளது. அமலாக்கத் துறை என்பது, அரசியல் எதிரிகளை ஒடுக்கும் துறையாக மாற்றப்பட்ட தற்போதைய சூழலில், அதற்கு உச்ச நீதிமன்றம் ஒன்றே விடியலாக இருக்கிறது. எமர்ஜென்சி காலத்தில்கூட இவ்வளவு நாள்கள் சிறை வாழ்க்கை கிடையாது. அரசியல் சதிச்செயல்கள் 15 மாதங்கள் தொடர்ந்தன. கைது செய்து சிறையிலேயே வைப்பதன்மூலம் செந்தில் பாலாஜியின் உறுதியை குலைக்க நினைத்தனர். ஆனால், முன்னிலும் உரம் பெற்றவராக சிறையில் இருந்து வெளியே வரும் செந்தில் பாலாஜியை வருக வருக என வரவேற்கிறேன். உன் தியாகம் பெரிது. உறுதி அதனினும் பெரிது.” என்று குறிப்பிட்டிருந்தார்.

தி.மு.க. செய்தித் தொடர்பு துறை தலைவர் டி.கே.எஸ்.. இளங்கோவன் கூறும்போது, “செந்தில் பாலாஜி அமைச்சராக தடையில்லை என்று உச்ச நீதிமன்ற தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. இது குறித்து முதல்வர் ஸ்டாலின் முடிவெடுப்பார்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# கேரளாவில் 2 ஆவது நபருக்கு குரங்கு அம்மை பாதிப்பு உறுதி




கேரளாவில் மற்றொருவருக்கு குரங்கு அம்மை பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள கேரள மாநில சுகாதாரத் துறை, இந்த நோய் தொடர்பான அறிகுறியுள்ளவர்கள் சிகிச்சை எடுத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தியுள்ளது.

இந்தியாவில் முதல் குரங்கு அம்மை பாதிப்பு கடந்த வாரத்தின் தொடக்கத்தில் கேரளாவில் கண்டறியப்பட்ட நிலையில், தற்போது இரண்டாவது பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, வெளிநாடுகளில் இருந்து மாநிலத்துக்கு புதிதாக வரும் அனைவரும் மாநில சுகாதார நிறுவனத்தை அணுக வேண்டும் என்றும் நோய் அறிகுறிகள் இருந்தால் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேரள மாநில சுகாதாரத் துறை அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து கேரள சுகாதாரத் துறை அமைச்சர் வீனா ஜார்ஜ் வெளியிட்ட அறிக்கையில்,

“அனைத்து மாவட்டங்களிலும் தனிமைப்படுத்துதல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் தேவையான நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.” என்று தெரிவித்தார்.

இதனிடையே, குரங்கு அம்மை நோய் தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களை சுகாதாரத் துறை கடந்த 23 ஆம் திகதி வெளியிட்டது. முன்னதாக, கேரளாவைச் சேர்ந்த ஒருவருக்கு நடத்தப்பட்ட சோதனையில் அவருக்கு குரங்கம்மை பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவில் முதல் குரங்கு அம்மை நோய் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது.

மாலப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த 38 வயது நபர் ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து வந்திருந்த நிலையில் அவர் குரங்கு அம்மை தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது என்று மத்திய அரசு தெரிவித்திருந்தது.

குரங்கம்மை நோய் பொதுவாக இரண்டு முதல் நான்கு வாரங்கள் வரை நீடிக்கும். மருத்துவ மேலாண்மை மற்றும் சிகிச்சை மூலம் பாதிக்கப்பட்டவர் குணம்பெறுவர். இந்நோய் ஏற்கனவே பாதிக்கப்பட்ட ஒருவருடன் நீண்ட மற்றும் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதன் மூலம் பரவுகிறது. பொதுவாக குரங்கு அம்மை நோய்பாதிக்கப்பட்டவர்களுக்கு காய்ச்சல், சொறி, மற்றும் நிணநீர் கணுக்கள் வீக்கம் போன்றவை பொதுவான அறிகுறிகள். மேலும் இது பல்வேறு மருத்துச் சிக்கலுக்கும் வழிவகுக்கிறது.

இதனிடையே, குரங்கு அம்மை நோய் பாதிப்பு பரவாமல் தடுக்கவும், பாதிக்கப்பட்டவர்கள் விரைவாக தனிமைப்படுத்தப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கவும் மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் தயார் நிலையில் இருக்க மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

# லெபனான் மிக மோசமான காலத்தை எதிர்கொள்கிறது

## ஐ.நா. கவலை

இஸ்ரேல் – ஹிஸ்புல்லா இடையே மோதல் அதிகரித்து வரும் நிலையில், ஹிஸ்புல்லா உடனான போர் நிறுத்தத்துக்கான உலகளாவிய அழைப்புகளை இஸ்ரேல் நிராகரித்துள்ளது.

இந்நிலையில், லெபனான் 'தலைமுறையில் மிக மோசமான காலக்கட்டத்தை' எதிர்கொள்கிறது என ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.

லெபனானில் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள இஸ்ரேல், தரைவழித் தாக்குதலுக்கும் தயாராகி வருகிறது.

இந்நிலையில், லெபனானில் உள்ள ஐ.நா. மனிதாபிமான ஒருங்கிணைப்பாளர் இம்ரான் ரிசா தெரிவிக்கையில்,

"நாடு பல தசாப்தங்களில் இல்லாத கொடூரமான போரை எதிர்கொள்கிறது. ஒரு தலைமுறையில் லெபனானில் மிக மோசமான காலக்கட்டத்தை நாங்கள் காண்கிறோம். நெருக்கடி இன்னும் மோசமடையக் கூடும். இது ஆரம்பம் என்று பலர் தங்கள் அச்சத்தை வெளிப்படுத்துகிறார்கள்." எனத் தெரிவித்துள்ளார்.

லெபனானில் இஸ்ரேல் நடத்தியத் தாக்குதலில் நேற்று காலை முதல் 25 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 700 ஆக அதிகரித்துள்ளது.

அதே நேரத்தில் தெற்கு லெபனானில் இருந்து அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற கட்டாயப்படுத்தியுள்ளனர். இடம்பெயர்ந்த மக்களுக்கான தங்குமிடங்களாக பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் மாற்றப்பட்டுள்ளன. தற்போது 446 இடங்கள் தயார் நிலையில் உள்ளன. லெபனானில் இரண்டு நாள்களில் குறைந்தது 50 குழந்தைகள் கொல்லப்பட்டனர் என்று யுனிசெஃப் கவலை தெரிவித்துள்ளது.

வடக்கு இஸ்ரேல் மீண்டும் பாதுகாப்பாக இருக்கும் வரை லெபனானின் ஹெஸ்புல்லா ஆயுதக் குழுவை, இஸ்ரேல் இராணுவம் குறிவைத்துத் தாக்கும் என்று இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் கூறுகிறார்.

ஹிஸ்புல்லாவுக்கு எதிரான தாக்குதல்கள் தீவிரமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 72 மணி நேரத்தில் 30,000-க்கும் அதிகமானோர் லெபனானில் இருந்து சிரியாவுக்குள் நுழைந்துள்ளனர் என அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் – ஹிஸ்புல்லா இடையே மோதல் அதிகரித்து வரும் நிலையில், முழுக்க முழுக்க ஈரான் நேரடியாக மோதலில் ஈடுபடாமல் மறைமுகமாகவும், போரைத் தவிர்க்கும் வண்ணமே ஹிஸ்புல்லாவுக்கு ஆதரவளித்து வருகிறது.

குறிப்பாக, தனது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை பற்றி சிந்திக்கும் வகையில் இவ்வாறு செயல்படுவதாக கூறப்படுகிறது.

# போரில் 'ஈடுபடாமல்' காய் நகர்த்தும் ஈரான்!



இஸ்ரேல் – ஹிஸ்புல்லா இடையே மோதல் அதிகரித்து வரும் நிலையில், முழுக்க முழுக்க ஈரான் நேரடியாக மோதலில் ஈடுபடாமல் மறைமுகமாகவும், போரைத் தவிர்க்கும் வண்ணம் ஹிஸ்புல்லாவுக்கு ஆதரவளித்து வருகிறது.

குறிப்பாக, தனது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு இவ்வாறு செயல்படுவதாக கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடங்கிய இஸ்ரேல் – ஹமாஸ் போர் இன்னும் முடிவடையாமல் உள்ளது. முன்னரே, இஸ்ரேலுக்கு எதிராக லெபனான் ஆதரவு அமைப்பான ஹிஸ்புல்லா இயக்கத்தினரை ஈரான் ஆதரிப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதற்கு மத்தியில், தனது பழைய பகையின் தொடர்ச்சியாக கடந்த மாதம் இஸ்ரேல் மீது ஏவுகணைகளை ஏவியது ஈரான். ஆனால், இஸ்ரேலின் பாதுகாப்பு சிஸ்டம் காரணமாக பெரிய சேதங்கள் தவிர்க்கப்பட்டன என இஸ்ரேல் அறிவித்திருந்தது. அதோடு, சில மாதங்களுக்கு முன்னர் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரெய்சி ஹெலிகாப்டர் விபத்தில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தி வெளியாகி சர்வதேச அளவில் பெரும் சலசலப்பை உருவாக்கியது.

உலக நாடுகளுக்கு அதிக அளவில் எண்ணெய்யை ஏற்றுமதி செய்யும் நாடாக ஈரான் இருக்கிறது. இது அந்நாட்டின் வருவாயில் கணிசமான பங்கு வகிக்கிறது.

இந்நிலையில்தான், ஈரான் மீது அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் பொருளாதார தடையை அறிவித்தன. குறிப்பாக, ஈரான் தொடர்ந்து மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்கிறது.

ஐரோப்பிய நாடுகளும் ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. உக்ரைன் போருக்காக ரஷ்யாவுக்கு ஏவுகணைகளை வழங்கியதாக குற்றம்சாட்டின. ஈரான் குற்றச்சாட்டுகளை மறுத்ததும் நினைவுகூரத்தக்கது. இவ்வாறு ஈரானின் நிலைமை சற்று கவலைகுரிய ஒன்றாகவே உள்ளது.

இந்நிலையில், தற்போது புதிதாக ஹிஸ்புல்லாவுக்கும் இஸ்ரேலுக்கும் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், உலக நாடுகள் அதிர்ச்சியில் உள்ளன. ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு பல ஆண்டுகளாக ஈரான் ஆதரவளித்து வருகிறது. ஆனால், தற்போது முழுக்க முழுக்க ஈரான் நேரடியாக மோதலில் ஈடுபடாமல் மறைமுகமாக ஹிஸ்புல்லாவுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகிறது. ஈரானைச் சேர்ந்த அரசியல் நிபுணரான ஹமீத் கோலம்சாதே, "ஈரான் போருக்கு இழுக்கப்படப் போவதில்லை" – என்றார்.

சர்வதேச நெருக்கடிக் குழுவைச் சேர்ந்த அலி வாஸ் ஈரான் குறித்து தனது பல்வேறு கருத்துக்களை வெளியிடுகையில்,

"ஈரான் நேரடியாக போரில் ஈடுபடப்போவதில்லை. ஏனென்றால், போரின் முடிவு இஸ்ரேலுக்கு நன்மை பயக்கும் என்பதால் ஈரான் சற்று கவனமாக தனது உத்திகளை கையாள்கிறது. ஈரான் தனது பரம எதிரியுடன் விளையாட விரும்பவில்லை. தங்களது நாட்டின் பொருளாதார நிலையை பாதுகாப்பதே ஈரானின் முன்னுரிமையாக உள்ளது" என்று தெரிவித்தார்.

இஸ்லாமிய குடியரசை கட்டுப்படுத்தும் நிலையில் இஸ்ரேல் போர் வெறியில் ஈடுபட்டுள்ளதாக ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் குற்றம் சாட்டினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒவ்வொரு நாளும் இஸ்ரேல் மேலும் அட்டூழியங்களைச் செய்து வருகிறது. இஸ்ரேல் ஆட்சியும் அதன் ஆதரவாளர்களும் மிகப் பெரிய பயங்கரவாதிகள். ஏனெனில் அவர்கள் தங்களிடம் உள்ள கருவிகள், அதிகாரத்தை பயனபடுத்தி மக்களைக் கொல்கிறார்கள்" என்று ஈரான் கூறினார்.



# ஆசியாவின் முதல் வீரராக பதிவாகும் கமிந்து மெண்டிஸ்

## சேர். பிரட்மனின் சாதனையை சமப்படுத்தினார்

கிரிக்கெட்டின் பிதாமகர் என போற்றப்படும் சேர். டொன் பிரட்மனின் சாதனையை சமப்படுத்திய பெருமையை இலங்கையின் கமிந்து மென்டிஸ் நேற்று பெற்றார்.

13 இன்னிங்ஸ்களில் 5 சதங்களை கடந்த சாதனையே அது.

சேர். டொன் பிரட்மன் அந்த சாதனையை 1930 ஆம் ஆண்டில் நிகழ்த்தியுள்ளமையுடன், அதனை தற்போது கமிந்து மென்டிஸ் எட்டிப்பிடித்துள்ளார்.

நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் சதமடித்ததன் மூலம் அவர் சாதனையை சமப்படுத்தியுள்ளார்.

காலியில் நடைபெறும் இந்தப் போட்டியில் 3 விக்கெட் இழப்பிற்கு 306 ஓட்டங்களுடன் இலங்கை அணி முதல் இன்னிங்ஸை தொடர்ந்தது.

ஏஞ்சலோ மெத்யூஸ் 78 ஓட்டங்களுடனும் கமிந்து மென்டிஸ் 51 ஓட்டங்களுடனும் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்தனர்.

மேலும் 22 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஏஞ்சலோ மெத்யூஸ் 88 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அணித்தலைவர் தனஞ்சய டி சில்வா 44 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

எனினும், 6ஆவது விக்கெட்டுக்காக இணைந்த கமிந்து மென்டிஸ் மற்றும் குசல் மென்டிஸ் ஜோடி வீழ்த்தப்படாத இணைப்பாட்டமாக 200 ஓட்டங்களைப் பகிர்ந்து இலங்கை அணியை உச்சகட்ட நிலைக்கு கொண்டு சென்றது.

இவர்கள் இருவரும் அடுத்தடுத்து சதமடித்ததுடன் குசல் மென்டிஸ் 106 ஓட்டங்களையும் கமிந்து மென்டிஸ் 182 ஓட்டங்களையும் பெற்றனர்.

கமிந்து மென்டிஸ் குறைந்த இன்னிங்ஸ்களில் 5 சதங்களை அடைந்த ஆசியாவின் முதல் வீரராகப் பதிவாகியுள்ளார்.

இதற்கு முன்பு பாகிஸ்தானின் பவாட் ஆலம் 22 இன்னிங்ஸ்களில் 5 சதங்களை எட்டி அந்த சாதனையை தன் வசம் வைத்திருந்ததுடன் தற்போது அதனை கமிந்து மென்டிஸ் தகர்த்து புதிய சாதனை படைத்துள்ளார்.

இலங்கை அணி 5 விக்கெட் இழப்பிற்கு 602 ஓட்டங்களைப் பெற்று முதல் இன்னிங்ஸை நிறுத்திக்கொண்டது.

கிலென் பிலிப்ஸ் 3 விக்கெட்டுகளையும் டிம் சவுத்தி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலளித்தாடும் நியூஸிலாந்து அணிக்கு ஆரம்பமே அச்சுறுத்தலாய் இருந்தது. டொம் லதம் 2 ஓட்டங்களுடனும் டெவோன் கொன்வே 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

கேன் வில்லியம்ஸன் 6 ஓட்டங்களுடனும் அஜாஷ் பட்டேல் ஓட்டமின்றியும் ஆட்டமிழக்காதுள்ளனர்.








பொது வேட்பாளர் சூத்திரதாரிகளுக்கு,
வணக்கம்.

நலம் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். இங்கு நான் வேண்டுவது உங்கள் நலத்தை அன்று. உங்களது அறிவீனத்தால் தமது நோக்கம் சிதைந்து நிற்கும், ஈழத்தமிழ் இனத்தின் நலத்தை நோக்கியேயாம்.

● ● ● ●

'இந்த முயற்சி வீண் முயற்சி, பிடிவாதத்திற்காக இதனைத் தொடராது கைவிட்டுவிடுங்கள்!' என, பலபேரும் தலை தலையாய் அடித்துக் கொள்ளவும், அதனை சிறிதும் பொருட்படுத்தாமல், 'தூர்ந்து' கொண்டிருக்கும் உங்களது அரசியல் அடையாளத்தை, மீண்டும் புதுப்பிக்க நினைந்து, நீங்கள் செய்த முயற்சி முழுமையாய்த் தோற்றுவிட்டது.

● ● ● ●

உங்களது அந்த சுயநல முயற்சியை, தமிழ் மக்கள் மேல் கொண்ட அக்கறையால் செய்யும் முயற்சியாய்க் காட்டி, நீங்கள் செய்த ஏமாற்று வேலை, இன்று தமிழ் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்திற்கு எதிராக மாறியிருக்கிறது.

● ● ● ●

எத்தனை போராளிகளின் உயிர்கள், எத்தனை பொது மக்களின் உயிர்கள், எத்தனை உடமை இழப்பு, எத்தனை உறுப்பு இழப்பு என, இப் போராட்டத்திற்காகத் தம்மை அர்ப்பணித்த, அத்தனைபேரது தியாகத்தையும், உங்களது சுயநலத்தால் 'நீர்த்துப்' போக வைத்துவிட்டீர்கள்.

● ● ● ●

ஈழத்தமிழ் மக்கள் அனைவரும், சுய உரிமையை வேண்டி நிற்கிறார்கள் என்பதை, உலக சமுதாயத்திற்குக் காட்டப் போவதாய்ச் சொல்லி, நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலை, அதற்கு பயன்படுத்தப் போவதாகவும் அறிவித்து, ஒரு பொதுவேட்பாளரை நியமித்து, அவ்வேட்பாளருக்கு அனைத்து தமிழரும் வாக்களிப்பதன் மூலம், ஒருமித்த நமது வாழ்வுரிமை பற்றிய விருப்பினை, உலகிற்கு தெரிவிக்க வேண்டும் என நீங்கள் சொன்ன போதே, இது நடக்காத காரியம் என பலரும் அடித்துச் சொன்னார்கள்.

● ● ● ●

அதனை ஏற்காது, 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' எனும் பழமொழிக்கு ஏற்ப, பிடிவாதம் பிடிக்கப்போய், தமிழ்த்தாயகத்தின் ஒட்டுமொத்த வாக்காளர் தொகையான, 21,71,870 எனும் எண்ணிக்கையில், வாக்களிக்காதவர்களினதும், நிரகரிக்கப்பட்டவர்களினதும் தொகை போக, எஞ்சிய வாக்குகளில் 2,26,343 வாக்குகளை மட்டுமே பெற்று, மிகுதியானவர்கள் எல்லாம் நமது சுய நிர்ணய உரிமைக் கொள்கைக்கு, ஆதரவாய் இல்லை என்பதான ஒரு மாயத் தோற்றத்தை உலகுக்குக் காட்டி நம்மினத்தை தலைகுனிய வைத்துவிட்டீர்கள்.

● ● ● ●

நமது தமிழ் மக்கள், சுதந்திர வேட்கை என்ற பெயரையும், மறைந்த போராளிகளின் பெயரையும், எவர் பயன்படுத்தினாலும், அவர்களின் பின்னால் கண்ணை முடிக்கொண்டு ஓடி வருவார்கள் என்ற, உங்களது வீண் கனவு பொய்யாகிவிட்டது.

● ● ● ●

மற்றொன்றையும் இங்கு நான் சொல்லியாக வேண்டும். போர்க் காலத்தில் நம்மை எல்லாம் கைவிட்டு, தம் நலம் நோக்கி நாடு நாடாக ஓடிய சிலபேர், அங்கு எப்படியோ பணம் சேர்த்துக் கொண்டு, பாதுகாப்பான இன்றைய சூழ்நிலையில், தாய் நாட்டின் மேல் திடீரெனப் பற்று ஏற்பட, இனத்துக்காய்ப் பாடுபடுவதாய்ச் சொல்லி இங்கு வாழும் தமிழர்களின் வாழ்வைப் பெரியளவில் பாதிக்க முனைகின்றார்கள்.

● ● ● ●

இத்தகைய வெளிநாட்டுத் தமிழர்களால், நாம் படும்பாடு கொஞ்சநஞ்சம் அல்ல. இவர்கள், நம்மண்ணில் முகிழ்க்கும் நன்மைகளை எல்லாம், தம் பணபலத்தால் அள்ளிச் செல்ல செய்யும் முயற்சி கொடுமையானது.

● ● ● ●

அழகான மணப்பெண்கள், படித்த மாப்பிள்ளைகள், விற்பனைக்கு இருக்கும் காணி வீடுகள், தரமான கோயில் அந்தணர்கள் என இவர்கள் 'முதல்ப்பால் கறிகளை' அள்ளிச் செல்ல, இந்த மண்ணுக்காய் வாழ்ந்த பலரும் மேற் சொன்னவைகளை இழந்து, 'கப்பிப்பால்' சொதிக்காய் காத்திருப்பது கொடுமையிலும் கொடுமை!.

● ● ● ●

மேற் சொன்ன விடயங்களின் வரிசையில், தமிழருக்கான நாடாளுமன்ற 'சீற்றுக்களையும்' இன்று இவர்கள் அள்ள நினைப்பதுதான் வேதனையின் உச்சம். இவர்கள், தம் பணபலத்தால் உருப்படியாய்க் கிடந்த கட்சிகளையும் உடைப்பித்து, சிதற வைத்திருப்பதை என்னவென்பது?

● ● ● ●

இவர்களின் உள் நோக்கம் தெரியாமல், மக்கள் ஆதரவு பெற்ற சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட, அவர்களின் பணவலையில் வீழ்ந்து, தம்மைத்தாம் இழிவு செய்தது தான் மிகப் பெரிய சோகம்.

● ● ● ●

அத்தகைய வெளிநாட்டு பணமுதலைகளின் பலம், உங்களின் பின்னால் இருந்த துணிவில் தான், களநிலை புரியாமல், காலாவதியான நீங்கள் எல்லோரும் சேர்ந்து, அரியநேத்திரனையும்,

நம் தமிழ் மக்களையும், சில தமிழ் எம்பிக்களையும், அநியாயமாக உங்கள் ஆசைக்காக பலிக்கடாக்கள் ஆக்கினீர்கள்.

● ● ● ●

அந்த வெளிநாட்டு வியாபாரிகள், 'பழைய கொம்பனியார்' போல, போரினால் வலுவிழந்து நின்ற நம் தமிழ்மக்களை விழுங்கி ஏப்பம் விட, பல நாள்களுக்கு முன்பே திட்டமிடத் தொடங்கி விட்டார்கள்.

● ● ● ●

ஊடகங்களென்றும் கட்சிக்கான அன்பளிப்புகளென்றும் பாதைகள் வகுத்து, இவர்கள் உள் நுழைந்த போது, நம் இனத்தின் மீதான அக்கறையால்த் தான், இவற்றையெல்லாம் இவர்கள் செய்கிறார்கள் என, தமிழ் மக்களும் ஏமாந்து தான் போனார்கள். தமிழ் மக்கள் மட்டுமல்ல தமிழ் தலைவர்களுந்தான்.

● ● ● ●

இவ்விடத்தில் ஒன்றை நான் சொல்லியே ஆக வேண்டும். அரசியல் என்றாலே பொருட்பலம்தான் எனும் உண்மை, நம் தலைவர்களில் பலருக்கு இன்று வரை தெரியவில்லை. திருவள்ளுவர் கூட அரசியல் உரைத்த தன் நூற்பகுதிக்கு, 'பொருட்பால்' எனப் பெயரிட்டார் என்பதை இவர்கள் அறியத் தவறினார்கள்.

● ● ● ●

வாக்குறுதிகளை அள்ளி வீசி பதவிகளைப் பிடிப்பதும், பின் அப்பதவிகளால் சுயநலம் வளர்ப்பதும் தான், அரசியலென நம் தலைவர்களில் பலர் நினைத்து விட்டார்கள். பொருட்பலத்தினை வளர்த்து, தம் கட்சியினை ஸ்திரப்படுத்த அவர்களுக்குத் தெரியவே இல்லை.

● ● ● ●

அதனால்தான் வெளியிலிருந்து வந்தோர் சிலர், கட்டுக்கட்டாய்ப் பணத்தாள்களைக் காட்டியதும், கொள்கைகளை மறந்து அவர்கள் பின்னால், வாய்திறந்து ஓட இவர்களிற் சிலர் தயாராகினர்.

● ● ● ●

இங்ஙனமாய் நம்அரசியலையும் அபகரிக்க, திட்மிட்டு வந்த பண முதலைகளுக்கு, அறிவு பூர்வமாக, சூழ்நிலைக்கேற்ப, நம் இனத்தை வழிப்படுத்த முனைந்து நின்ற, சுமந்திரனைப் பிடிக்காமல் போயிற்று. இவர்களின் திட்டமிடுதலில்த்தான் சுமந்திரனை இனத்துரோகியாக காட்டும் வேலையும் தொடங்கிற்று.

● ● ● ●

ஊடகங்களையும் பணத்தையும் கையில் வைத்துக் கொண்டு, இவர்கள் தொடங்கிய பிரச்சாரத்தை தமிழ் மக்களும் நம்பி விட்டார்களோ? என ஓர் மயக்கம் உண்டாகியது உண்மையே.

● ● ● ●

ஆனால், நடந்து முடிந்த தேர்தல்கள், தமிழ் மக்கள் சுமந்திரன் மீது வைத்த நம்பிக்கையை உறுதி செய்து கொண்டேயிருந்தன. அதிலிருந்து தமிழ் மக்கள், தம் கைத்தராசுகளைச் சரியாகவே பாவிக்கிறார்கள் என உணர முடிந்தது.

● ● ● ●

மற்றைய தமிழ் எம்பிக்கள், என்மேல் கோபித்தாலும் பரவாயில்லை என்ற முடிவோடு, இவ்விடத்தில் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நன்றாக ஆராய்ந்து பார்த்தால், இன்றைய நிலையில் நமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குள், அறிவாற்றல் மிக்கவரமாகவும், செயலாற்றல் மிக்கவராகவும் சுமந்திரன் தான் திகழ்கிறார் என்பது மறுக்க முடியாத உண்மை.

● ● ● ●

நமது எதிரிகளின் திட்டங்களை அறிந்து எதிர்வினை ஆற்றுவதற்கும், நமது கருத்தை தெளிவுபட உலகுக்கு உரைப்பதற்கும், யதார்த்த நிலை உணர்ந்து புதிய திட்டங்கள் தீட்டுவதற்கும், சுமந்திரனுக்கு சமமாக இன்று ஒருவர் எமக்குள் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை.

● ● ● ●

இதனை நான் எழுதியதும், இவர் சுமந்திரனுக்கு வால் பிடிக்கின்றார், அல்லது சுமந்திரனுக்கு தாளம் போடுகிறார், என்றெல்லாம் 'மீம்ஸ்' போட்டு, என்னை இழிவுபடுத்த பலபேர் முனைவார்கள். அது பற்றி எனக்குக் கவலையில்லை!.

எனக்கு எழுபது வயது ஆகப்போகிறது.இதற்கு மேல் என் புகழ் நோக்கி இனத்திற்கு எதிரான, பொய்மையோடு சமரசம் செய்து கொள்ள நான் விரும்ப வில்லை.

● ● ● ●

இப்படி நான் சொன்னதற்காக, சுமந்திரன் தான் உலகத்தில் சிறந்த தலைவர் என நான் சொல்வதாகவும் அர்த்தப்படுத்திக் கொள்ளாதீர்கள். இந்திராகாந்தி போன்ற தலைவர்களின் ஆளுமையைக் கண்டு, வியந்த எனக்கு சுமந்திரனின் தலைமைத்துவத்தில் பல மனக்குறைகள் உண்டு.

● ● ● ●

பிழையோடு சமரசம் செய்து கொள்ளும் முயற்சி, ஆண்மையாய் உறுதிபட முடிவெடுக்க தயங்கும் தன்மை, தான் மதிக்கப்படாத போது பதவிகளை தூக்கி எறிந்து விட்டு வெளிவரத் தயங்கும் அவரது இயல்பு, இராஜ தந்திரமாய் எதிரிகளைக் 'கட்டம் கட்டி' வீழ்த்தத் தெரியாத, மதிநுட்பம் இன்மை, தன் கருத்தை மக்கள் கருத்தாக மாற்றத் தெரியாத, அல்லது மக்கள் கருத்தை தன் கருத்தாக உரைக்கத் தெரியாத அவரது சொல் வன்மைச் சோர்வு என, அவரது தலைமைத்துவத்திலும் பல குறைகள் உண்டென்றே இருக்கத்தான் செய்கின்றன.

● ● ● ●

ஆனாலும், இன்றைய நிலையில் அவரை விட்டால் நமக்கு தக்க தலைவர் வேறெவரும் இல்லை என்றே தோன்றுகிறது. சாணக்கியன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகிய இருவரையும் ஓரளவு ஆற்றல் உள்ளவர்களாய் நாம் ஏற்றுக் கொள்ள முடியும். சாணக்கியனும், சுமந்திரனும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இயங்கி வருகிறார்கள். நம் இனத்தின் துரதிஷ்டத்தால் கஜேந்திரக்குமார் நோய் வாய்ப்பட்டிருக்கிறார். இதுதான் இன்றைய நமது தலைமைகளின் நிலை.

● ● ● ●

மேற் சொன்ன வெளிநாட்டு முதலைகள் தான், சுமந்திரனை தம் எதிரியாகக் கருதினார்கள். காரணம், தம் எண்ணங்களை எல்லாம் இலகுவாகக் கட்சிக்குள் விதைக்க சுமந்திரன் தடையாக இருந்ததேயாம். அவரை தம் பணத்தினால் வீழ்த்த முடியாது போக, அவர்கள் கோபம் உற்றார்கள்.

● ● ● ●

அதனால்த்தான் அவர் வெளிநாடுகளுக்குச் சென்ற போதெல்லாம், குறிப்பிட்ட சில 'ரவுடிகளை' ஏவி முடிந்தளவு அவரை இழிவு செய்ய முயன்றார்கள். அவரை ஓர் இனத்துரோகி போல பல வழிகளாலும் காட்ட வழிசெய்தார்கள். 'சுத்துமாத்துச் சுமந்திரன்' என அவருக்குப் பட்டம் சூட்டி உள்ளூருக்குள்ளேயே அவரின் மதிப்பை வீழ்த்த நினைத்தார்கள்.

● ● ● ●

ஆனால் உண்மை நிலை உணர்ந்து, சி.வி.கே. சிவஞானம் போன்ற கட்சியின் மூத்த தலைவர்கள், சுமந்திரனின் கையைப் பலப்படுத்தவே விரும்பி நின்றனர். அதுமட்டும் அல்லாமல், வெளிநாடுகளிலிருந்து வந்த தூதுவர்கள் கூட,பெரும்பாலும் சுமந்திரனுடனேயே இனப்பிரச்சினை பற்றிப் பேச விரும்பினார்கள். அதற்குக் காரணம்,

அங்ஙனம் பேசத்தக்க வேறு யாரும் இங்கு இல்லை என்பது தான்.

• • • •

இன்றைய நிலையில், நம் நிலை உரைக்க, தமிழ் மக்கள் சுமந்திரனை நோக்கி, பாஞ்சாலி போல 'ஆபத்தாண்டவா அபாயரட்சகா' எனக் கை தூக்கும் நிலையில்த் தான் இருக்கிறார்கள். இந்த உண்மையை நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் தெளிவுற உலகுக்கு எடுத்துரைத்து விட்டது.

• • • •

சுமந்திரனின் வழிப்படுத்தலில் சஜித்துக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென தமிழரசுக் கட்சியின் மத்திய குழு எடுத்த முடிவினை, மாற்றார் கருத்தை நிராகரித்து வடக்குக் கிழக்கு மக்கள் முழுமையாய் ஏற்றுக் கொண்டமை தெளிவாகியிருக்கிறது.

• • • •

பாவம், 'விண்ணகம் கேட்டு மண்ணும் இழந்த திரிசங்கு' போல, அரியநேந்திரனின் நிலை அந்தர நிலையாகிவிட்டது. அவர் நிலை மட்டும் அல்ல, அவரைத் தூண்டிவிட்ட, உங்கள் அனைவரதும் நிலையுந்தான்.

• • • •

கிழக்கில் சாணக்கியன் பெரும் பாடுபட்டு சஜ்ஜித்தின் வெற்றிக்கு வழி செய்தார்.

வடக்கிலோ, தனியொருவராய் நின்று பாடுபட்டு சஜ்ஜித்தின் வெற்றியில் தன் வெற்றியையும் பதிவு செய்திருக்கின்றார் சுமந்திரன்.

• • • •

இதனை சுமந்திரனுக்கான வெறும் பாராட்டு உரையாக, நான் இங்கு எழுத வில்லை. இதனை நான் எழுதுவதற்கு வேறு காரணமுண்டு. தமிழ் மக்கள் தன் மேல் நம்பிக்கை கொண்டு, தன் கையில் தலைமைச் செங்கோலைத் தந்திருப்பதை, இனியேனும் சுமந்திரன் தெளிவாக உணர்ந்தாக வேண்டும். உணர்த்தியாகவும் வேண்டும்!

• • • •

கிடைத்த இந்த மக்கள் ஆணையை வைத்து, கட்சியில் தனது ஆட்சியை இனி அவர் உறுதியாய்ப் பதிவு செய்ய வேண்டும். தனது கட்டுப்பாட்டுக்குள் கட்சியை முழுமையாய் கொணர்ந்து, நிமிர்வோடு அதனை வழிநடத்த இனி அவர் முன் வரவேண்டும். பழைய பகைகளை எல்லாம் மறந்து, அனைவரையும் ஒன்றுபடுத்தி, (முடிந்தால், பிரிந்து நிற்கும் கூட்டமைப்பினரையுந்தான்) கட்சிக்குள் தனது பலத்தை உறுதி செய்வதோடு, இனத்தின் பலத்தையும் உறுதி செய்தாக வேண்டும்.

• • • •

பிரச்சினைகளைச் சமாளித்துத் தாண்ட நினைத்த சம்பந்தரின் கொள்கையை தானும் பின்பற்றாமல், இனியேனும் கட்சிக்கு அவர் பலமூட்டவேண்டும். நல்லதொரு தலைவன் தனக்கு நஷ்டம் வரும் என்று தெரிந்தாலும், இனத்தின் நன்மை நோக்கி உறுதியான முடி வெடுக்கத் தயங்கக்கூடாது.

• • • •

தமிழ்மக்களும் சுமந்திரனுக்கு எத்தனை தரந்தான் சந்தர்ப்பம் தர முன் வருவார்கள்? இனியும் சுமந்திரன் மேற்ச்சொன்னவற்றை செய்யாவிட்டால், உலகம் அவரைக் கேலி செய் வதைத் தவிர்க்க முடியாது.

• • • •

பெரியீர்! உங்களுக்கென கடிதத்தை எழுத்த தொடங்கி, நமது அரசியல் சூழலையும் ஆராய வேண்டியதாய்ப் போயிற்று. மற்றொன்று விரித் திருப்பதாய்க் கருதாதீர்கள். மேற்சொன்ன விட யங்கள் உங்களாலும் உணரப்பட வேண்டியவையே! சுமந்திரனின் பலத்தை வெளிப்படுத்தி, இந்த நன்நெறியை அவருக்குக் காட்டிய புண்ணியம், உங்களைத்தான் சேரும்.

• • • •

தீமையிலும் நன்மை விளைவித்திருக்கும் உங்களைப் பாராட்டி, இக்கடிதத்தை நிறைவு செய் கிறேன்.

'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'



# முன்னாள் எம்.பிகளுக்குரிய பாதுகாப்பு நீக்கப்பட்டது!

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு நேற்று முதல் நீக்கப்பட்டுள் ளது.

எனினும் சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு மீளப் பெறப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 6 பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்ற அடிப்படையில் இதுவரையில் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.



# இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கை நாடாளுமன்றத்துக்கும் பாகிஸ்தான் நாடாளுமன்ற சேவைகள் நிறுவகத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற ஜனநாயக மரபுகளை வளர்த்தப்பதற்கும் சட்டமாக்க நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கிலும் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தியுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் நாடாளுமன்ற சேவைகள் நிறுவகத்தின் சார்பில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பாஹீமுல் அஸீஸும் இலங்கை நாடாளுமன்றம் சார்பில் நாடாளுமன்ற செயலாளர் குஷானி ரோஹனதீரவும் கையெழுத்திட்டுள்ளனர்.

இலங்கை நாடாளுமன்ற பணியாளர்களுக்குப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கும்போது இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் பயனுள்ளதாக அமையும் எனத் தாம் நம்புவதாக இலங்கை நாடாளுமன்ற செயலாளர் குஷானி ரோஹனதீர இதன்போது தெரிவித்துள்ளார்.















# பூவரசங்குளத்தில் கோர விபத்து! இளைஞர் ஒருவர் பரிதாபச் சாவு!!

(கே.வசந்தன்)

வவுனியா, பூவரசங்குளம் – குருக்கல்புதுக்குளம் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார் என்று பூவரசங்குளம் பாலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, குருக்கல்புதுக்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்பாதே விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் தீப்பற்றி எரிந்ததுடன், பயணித்த இளைஞரும் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்

இந்தச் சம்பவத்தில் 30 வயதுடைய குருக்கல்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் சர்மிளன் என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பதில் பொலிஸ்மா அதிபராக பிரியந்த வீரசூரிய நியமனம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசமைப்புக்கு அமைவாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கு அமைவாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவால் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

158 வருட பொலிஸ் வரலாற்றில் கான்ஸ்டபிளாக சேவையில் இணைந்து கொண்டவர்கள் வரிசையில் பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்றுக் கொண்டிருக்கும் ஒரே அதிகாரி பிரியந்த வீரசூரிய ஆவார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் நீதித்துறையில் பட்டம் பெற்ற அவர் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் பொலிஸ் அதிகாரியாக நிலை உயர்வு பெற்றார்.

மனித வள முகாமைத்துவம் தொடர்பான வர்த்தக நிர்வாக பட்டத்தையும் அவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

பொலிஸ் திணைக்களத்துக்குள் முப்பத்தாறு வருட கலங்கமற்ற சேவையை ஆற்றியுள்ள வீரசூரியவின் சேவையைப் பாராட்டி 10 முன்னாள் பொலிஸ்மா அதிபர்கள் கடிதம் வழங்கியுள்ளமை சிறப்பம்சமாகும்.

பொலிஸ் குற்றம் மற்றும் போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும், பொலிஸ் விநியோகப் பிரிவின் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ள அவர், கிழக்கு தீமோர் மற்றும் ஹைட்டி ராஜ்ஜியத்தில் ஐ.நா. அமைதி காக்கும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளார்.

பதில் பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்றுக்கொள்ளும் வேளையில், வீரசூரிய வட.மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகச் சேவையாற்றினார்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.09.2024




இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.




இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும். வாழ்வின் நன்மை தீமை உணர்வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகள் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக்கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஆரோக்கியமாக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சீரான பணப்புழக்கம் காணப்படும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலையை தவிர்க்கலாம்.ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமாரிக்க இத்தகைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும். குறைவான பணப்புழக்கம் காரணமாக நீங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல்களில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தினால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். இன்று செலவுகள் அதிகரித்து காணப்படும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தியை உணர்வீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நல்லாதரவு பெறும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணயுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் பரஸ்பரம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அன்பு வளரும்.

அதிக பண வரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.




இன்று நீங்கள் உங்கள் உணர்வுகளையும் உணர்சிகளையும் கட்டுபடுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.09.2024




இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரைெ யாருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக் கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை உயர்த்துவதற்கு நீங்கள் இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.




இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளி தில் அடைவீர்கள். உங்களின் உறுதி யான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்த இயலும்.

இன்று சௌகரியங்கள் அதிகம் காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும்.அனுசரணையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப் பணிகள் சுமையாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.சிறப்பான ஆரோக்கியத்திற்கு முறையான உணவு முறையை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். ஆன்மீக ஈடுபாடு காரணமாக மன அமைதி கிடைக்கும். இது உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.




சில குடும்ப பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள்.எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள வதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப் படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்து கொள்ள இயலாது.

